SENGUNTHAR
# Daily News
22-07-2025/SEC/DN/221







## World Brain Day Observed at Sengunthar Engineering College

The Department of Medical Electronics at Sengunthar Engineering College observed World Brain Day with an insightful awareness programme aimed at promoting brain health and neurological well-being. The session was delivered by Dr. V. Venkatesan, MBBS, MBA (Hospital Administration), Assistant Director of Sengunthar Allied Health Science, Tiruchengode. Addressing the students, Dr. Venkatesan emphasized the importance of early diagnosis, lifestyle changes, and the role of advanced medical technology in managing neurological disorders.The event witnessed enthusiastic participation from students and faculty, underlining the institution's commitment to health awareness and academic enrichment.



## போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி

போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன். மேலும் எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். பழக்கத்திற்குள்ளானவர்களை அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன்.போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்குத் துணைநிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதிகூறுகிறேன்.

**SENGUNTHAR**

# Daily News

22-07-2025/SEC/DN/221

## நுவலிதமிழ்மன்றம் - தினம்ஒருதிருக்குறள்



**குறள் 581**
ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்

**விளக்கம்**
நேர்மையும் திறனும் கொண்ட ஒற்றரும், நீதியுரைக்கும் அறநூலும் ஓர் அரசின் கண்களாகக் கருதப்பட வேண்டும்.

## இலக்கணக் குறிப்பறிதல்

தீராத வறுமை_ எதிர்மறைப் பெயரெச்சம்

**விளக்கம்**
நிகழ்ச்சி நடவாமையாகிய எதிர்மறைப் பொருளில்வரும் தன்மையும் பெயரெச்சத்திற்கு உண்டு.

இது, காலம் காட்டுவதில்லை. முக்காலத்திற்கும் பொதுவானதாக

அமையும்.

## பிறமொழிக்கு இணையான தமிழ்ச் சொற்கள்

பிறமொழி: சகஜம் தமிழ்மொழி : வழக்கம்